# மாலை முரசு

பக்கங்கள் 18+2

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 14 ஞாயிற்றுக்கிழமை 10.11.2024 | அதிர்வு 101


## அம்பலாங்கொடயில் இன்று இருவர் சுட்டுப் படுகொலை!



அம்பலாங்கொடஊராவத் தையில் இன்று நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஆண், பெண் என இருவர் 04


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்






ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா யாழ்ப்பாணத்தில் பங்குபற்றும் கூட்டம் இன்று மாலை பாசையூரில் நடைபெறுகிறது. இன்று மாலை 5.15 மணிக்கு ஜனாதிபதி கூட்ட இடத்துக்கு வந்து சேர்ந்தார். கூட்டம் இன்று பிற்பகல் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அங்கு எடுக்கப்பட்ட படங்கள் இவை. படங்கள்: ந.லோகதயாளன்

# பெரும்பான்மை இல்லாவிடின் கூட்டணி அரசுக்கும் தயார்!

## ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்



அடுத்த நாடாளுமன்றத்தில் எந்தவொருதரப்பினருக்கும்பெரும் பான்மையான மக்கள் ஆணை கிடைக்கவில்லைஎன்றால்கொள்கை யளவிலான கூட்டணியொன்றை அமைத்து சட்டவாக்க ஆட்சி அதிகாரத்தினை முன்னெடுப்பதற்கான பேச்சுக்களை தொடர்வதற்கு நாம் தயாராகவே உள்ளோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர்ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார். 04



## ஊடகவியலாளரின் மீது கோப்பாயில் தாக்குதல்



யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் ஊடகவியலாளர் ஒருவர் மீது இனந் தெரியாத நபர்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஊடகவியலாளர் கோப்பாய் சந்தி அருகில் பயணித்த போது இன்று காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. 04






## 23 இந்திய மீனவர் நெடுந்தீவில் கைது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.20 இலங்கைக் கடற்பரப் பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன்பிடித்தவர்கள் என்று கருதப்படும் 23 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் 04



# தமிழகம் சென்ற அகதிகள் 9 பேர் படகில் இன்று தாயகம் மீண்டனர்

(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு அகதிகளாகச் சென்ற 9பேர் இன்று அதிகாலை படகு வழியாக தாயகம் திரும்பியுள்ளனர்.

இந்திய அதிகாரிகளின் கண்களில் சிக்காமல் அவர்கள் தப்பி வந்துள்ளனர்.

2006, 2022 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு தப்பிச் சென்ற 9 பேரே இன்று அதிகாலை நெடுந்தீவில் கரை சேர்ந்தனர்.

இவ்வாறு கரை சேர்ந்தவர்களிடம் நெடுந்தீவுப் பொலிஸார் வாக்கு மூலங்களைப் பதிவு செய்த பின்னர் நீதிவான் முன்னிலையில் அவர்களை ஆஜர் செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தாயகம் திரும்பியவர்களில் திருகோணமலை, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 03 ஆண்கள், 03 பெண்கள், 03 சிறார்கள் என 09 பேர் இருக்கின்றனர் என நெடுந்தீவுப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



## கட்டுநாயக்க விமான நிலையத்தில் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுமார் 4 கோடி ரூபாய் பெறுமதியுடைய குஷ் ரக போதைப்பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தாய்லாந்திலிருந்து நேற்றிரவு வருகைதந்த அந்த நபரை நேற்றிரவு சுங்கத்தின் போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் சோதனையிட்டபோது அவரது பையிலிருந்து போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கைதான சந்தேகநபர், மருதனைப் பகுதியைச் சேர்ந்த 58 வயதுடைய ஒருவரெனத் தெரியவந்துள்ளது.

அவரிடமிருந்து சுமார் 5 கிலோகிராம் குஷ் ரக போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## இலங்கைக்கு வருகைதரவுள்ள ஐ.எம்.எப். பிரதிநிதிகள் குழு

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த வார இறுதியில் இலங்கைக்கு வருகைதரவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள விரிவாக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான மூன்றாவது மீளாய்வு குறித்துக் கலந்துரையாடுவதற்காக இந்தக் குழு இலங்கை வரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் பிரதானி பீட்டர் ப்ரூவர் தலைமையில் இந்த குழு இலங்கை வரவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

# நிலுவைத் தொகை அனைத்தையும் 30 ஆம் திகதிக்குள் செலுத்தவும்

## இலங்கை மதுவரி திணைக்களம் அறிவிப்பு

மது உற்பத்தியாளர்களுக்கு விதிக்கப்பட்ட வரிக் காலகட்டத்தில் நிலுவைத் தொகையைச் செலுத்தாதது தொடர்பாக, அனைத்து நிலுவைத் தொகையையும் இம்மாதம் 30 ஆம் திகதிக்குள் செலுத்துமாறு இலங்கை மதுவரி திணைக்களம் இறுதி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கை மதுவரி திணைக்களத்தின் கூற்றுப்படி, ஏறக்குறைய 10 நிறுவனங்கள் வரி நிலுவைத் தொகையைச் செலுத்த வேண்டியுள்ளதுடன், அவை 8.5 பில்லியன் ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது.

இந்த காலப்பகுதிக்குள் செலுத்த வேண்டிய பணத்தை உடனடியாக செலுத்தாவிட்டால், அந்த நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயாராக இருப்பதாக இலங்கை மதுவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.



# மாவீரர் துயிலுமில்லங்கள் என அல்லாமல் சுடுகாடு எனக் கருதியாவது விடுவியுங்கள்!

## ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிடம் வேண்டுகோள் விடுக்கின்றார் மாவீரரின் சகோதரரான வேட்பாளர் சுதன்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதனை மாவீரர் துயிலுமில்லமாக நினைக்காவிடினும் ஒரு சுடுகாடாக நினைத்து விடுவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் பொன். சுதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று மாலை கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தில் அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"அருணோதயம் மக்கள் முன்னணி" சார்பில் யாழ் தேர்தல் மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக அவர் போட்டியிடுகின்றார். பதிவு செய்யப்பட்ட அக் கட்சியின் தேர்தல் சின்னம் தண்ணீர்ப் பைப்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

"இங்குதான் ஆயிரக்கணக்கான மாவீரர்களுடைய வித்துடல் விதைக்கப் பட்டுள்ளன. அதில் எனது சகோதரரும் ஒருவர். எம்மை பொறுத்தவரை இது துயிலுமில்லம். ஒரு சிலரை பொறுத்த வரை இது சுடுகாடு.

**அஞ்சலிக்க முடியாத நிலை**

பிணங்கள் குவிக்கப்பட்ட இடத்தில் குடியிருப்பதை நான் இதை விட வேறு எங்கும் கண்டதில்லை. எங்களுடைய உறவுகள் புதைக்கப்பட்ட இடங்களில் இலங்கை இராணுவம் குடியிருக்கின்றது.

அவர்களைப் பொறுத்தவரை இவர்கள் பயங்கரவாதிகளாக இருக்கலாம். ஆனால் எம்மை பொறுத்தவரை இவர்கள் எமது உறவுகள், அண்ணன் தங்கைகள்.

இவர்களை அஞ்சலிக்க கூட முடியாத நிலையில் இலங்கை அரசாங்கம் எம்மை வைத்துள்ளது.

**ஜனாதிபதியிடம் கோரிக்கை**

இந்த இடத்தில் நின்று கொண்டு இலங்கை ஜனாதிபதி, பௌத்த குருமார்கள், சிங்கள மக்களுக்கு இருகரம் கூப்பி ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இதை துயிலும் இல்லமாக நினைக்காவிடினும் ஒரு சுடுகாடாக நினைத்து இதை விடுவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இதை விடுவிக்கும் பட்சத்தில் அமைதி, சமாதானம் இதில் இருந்தே ஆரம்பிக்கப்படும். இறந்தவர்களை அஞ்சலி செலுத்தும் உரிமை தமிழ் மக்களுக்கு கிடைக்கும் போது ஓரளவேனும் மன நிறைவாக இந்த நாட்டில் அவர்கள் வாழ முடியும்." – எனத் தெரிவித்தார்.

# பதுளை - மஹியங்கனை வீதியில் மதிலை உடைத்து உள்புகுந்த பஸ்



பதுளை – மஹியங்கனை பிரதான வீதியில் இன்று காலை பயணித்த தனியார் பஸ் ஒன்று வீடொன்றின் மதிலில் மோதி விபத்துக்குள்ளாகி யுள்ளது.

சுமார் 30 பேருடன் பயணித்துக் கொண்டிருந்த பஸ் படலபிட்டிய பிரதேசத்தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகில் உள்ள வீடொன்றின் மதிலில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் பஸ்ஸின் சாரதிக்கு சிறு காயம் ஏற்பட்டுள்ளதாகவும், மற்ற பயணிகள் எவருக்கும் காயம் ஏற்பட வில்லை எனவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், பஸ் விபத்துக்குள்ளான போது, வீட்டில் ஒரு சிறு குழந்தை மற்றும் ஒரு தம்பதி இருந்த நிலையில் அவர்கள் வேறு அறையில் இருந்தமையால், குடியிருப்பாளர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப் படுகின்றது.

மேலும், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# யாழில் அநுரவுக்காகக் கூடிய கூட்டம்





## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**பெரும்பான்மை...**

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரான சூழலில் கூட்டு அரசாங்கம் அமைப்பது பற்றி பேச்சுக்கள் அரசியல் அரங்கில் காணப்படுகின்ற நிலையில் அது பற்றிய உரையாடல்களை ஐக்கிய மக்கள் சக்தி ஆரம்பித்துள்ளதா என்பது தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியானது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவைப் பிரதமர் வேட்பாளராக அறிவித்துவிட்டு நாடளுமன்றத் தேர்தலை முகங்கொடுக்கிறது. எமது கூட்டணியில் தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகள் பங்காளிகளாக உள்ளன.

தற்போது வரையில் எமது கூட்டணி மிகவும் வலுவானதாகவும் பிளவுபடாத வகையிலும் உள்ளது. அந்த வகையில் மூவின மக்களும் நிதி மற்றும் சட்டவாக்க அதிகாரம் கொண்ட நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதற்கான ஆணையை வழங்குவார்கள் என்ற பாரிய நம்பிக்கை எமக்குள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் கடந்த ஒரு மாத கால ஆட்சியை மக்கள் அவதானித்துள்ளார்கள். அவர்களின் நிலைமையை மக்களால் உணர்ந்துகொள்ள முடிகிறது. ஆகவே பெரும்பான்மை பலம் கொண்ட நாடாளுமன்றத்துக்கான ஆணையை மக்கள் நிச்சயமாக ஐக்கிய மக்கள் சக்திக்கே வழங்குவார்கள்.

அந்த வகையில், நிதி அதிகாரம் கொண்ட நாடாளுமன்ற ஆட்சியை சிறப்பாக முன்னெடுப்போம்.

ஒருவேளை, நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் எந்தவொரு தரப்பினருக்கும் பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் எமது கொள்கைகளுடன் ஒத்துப்போகக்கூடிய – ஊழல், மோசடிகள் சம்பந்தப்படாத மற்றும் கறைபடியாத தரப்பினருடன் ஒன்றித்து பயணிப்பது பற்றிய உரையாடல்களை முன்னெடுப்பதற்குத் தயாராக இருக்கின்றோம்.

அதாவது கொள்கை வழியிலான கூட்டணியொன்றை அமைப்பதற்கான பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு எமது கட்சி தலைமையிலான கூட்டணியினர் தயாராகவே உள்ளனர். – என்றார்.

---

**ஊடகவியலாளரின்...**

இத் தாக்குதலுக்கான காரணம் தெரியவராத நிலையில் யாரும் எதிராளிகளின் திட்டமிட்ட நடவடிக்கையாக இது இருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஊடகவியலாளரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளாகிய ஊடகவியலாளர் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

**23 இந்திய...**

கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த 23 இந்திய மீனவர்கள் 3 படகுகளில் நெடுந்தீவுக் கடற்பரப்பிற்குள் ஊடுருவி மீன்பிடியில் ஈடுபட்ட சமயம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இன்று காலை கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் இதுவரை கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவில்லை.

இதன் காரணமாக இந்திய மீனவர்கள் நாளைய தினமே நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

---

**அம்பலாங்கொடயில்...**

உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீதே இந்தர் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் மற்றொரு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஆணும், பெண்ணும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். அவர்கள் இருவரும் அம்பலாங்கொடை – குளிகொட பிரதேசத்தைச் சேர்ந்த கணவன் மனைவி எனத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த இருவரும் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய விசாரணையின்படி ரி 56 ரக துப்பாக்கியால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ்த்தேசியம் பேசும் சிலர் பன்னாட்டு நிறுவனங்களின் பணத்துக்குச் சோரம் போயுள்ளனர் என்று குற்றச்சாட்டு!

## வேட்பாளர் ஐங்கரநேசன் முன்வைக்கின்றார்



இலங்கையில் ஜனாதிபதியாக இருப்பவர், பிரதமராக இருப்பவர் தமது நலன்களைப் பேணுபவராக இருக்க வேண்டும் என்று இந்தியாவோ அல்லது வேறு வல்லாதிக்க நாடுகளோ விரும்புவது வழமை. ஆனால், இப்போது பன்னாட்டு நிறுவனங்களும் தமது திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தமக்குச் சேவகம் செய்யக்கூடியவர்க நாடாளுமன்றில் உறுப்பினர்கள் இருக்கவேண்டும் என்று விரும்புகின்றன. நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வெவ்வேறு கட்சிகளில் இருந்தும் பணத்துக்கு மசியக்கூடிய வேட்பாளர்களை அடையாளம் கண்டு அவர்களை வெல்ல வைத்து நாடாளுமன்றம் அனுப்புவதற்காகப் பணத்தை தண்ணீராகச் செலவு செய்கின்றன. பன்னாட்டு நிறுவனங்களின் பணத்துக்குத் தமிழ்த் தேசியம் பேசும் வேட்பாளர்கள் சிலரும் சோரம்போயுள்ளனர் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயத் தமிழரசுக் கூட்டமைப்பின் சார்பில் மாம்பழம் சின்னத்தில் சுயேச்சையாகப் போட்டியிடும் பொ. ஐங்கரநேசன் நல்லூரில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற பரப்புரைக்கூட்டத்தில் உரையாற்றியபோதே இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

இந்நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய அரசியல் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அண்மையில் ஒருசில பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் வேறு புத்திஜீவிகள் சிலரும் இணைந்து ஜே.வி.பிக்கு வாக்களிக்குமாறு ஊடகவியலாளர் சந்திப்பை நிகழ்த்தி மக்களைக் கோரியுள்ளனர். இவர்கள் மாற்றத்துக்காக மாற்றானுக்கு வாக்களிக்குமாறு கோரியுள்ளார்கள். இலங்கைத் தேசியத்துக்குள் தமிழ்த் தேசியத்தைக் கரைத்து எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் விதமாகவே இவர்களது கோரிக்கை அமைந்துள்ளது.

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் தமிழ் மக்களுக்கான அரசியல் மாற்றம் அல்ல. தமிழின விரோதத்தைக் கக்கிவந்த ஜே.வி.பி. ஆட்சியதிகாரத்தில் ஏறியவுடன் தங்கள் குணத்தை மாற்றிக் கொள்வார்கள் என்று நாம் எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது. தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வைப் புறம் தள்ளி ஜே.வி.பி மட்டுமல்ல எந்தவொரு தென்னிலங்கைக் கட்சியாலும் இலங்கையின் பொருளாதாரத்தை விருத்தி செய்யமுடியாது. எமது புத்திஜீவிகள் ஜே.வி.பிக்கான ஆதரவை மக்களிடம் கோருவதற்குப் பதிலாக இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்குமாறு ஜே.வி.பிக்கே அழுத்தம் கொடுக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிளவுகளும், அரசியல்வாதிகளின் மதுபான அனுமதிப்பத்திர வியாபாரங்களும் மக்களிடையே தமிழ் அரசியல்வாதிகள் மீது வெறுப்பையும் சலிப்பையும் ஏற்படுத்தியுள்ளன. தமிழ்க் கட்சிகள் மீது மக்கள் கொண்டிருக்கும் இந்த அதிருப்தியைத் தென்னிலங்கைக் கட்சிகள் தங்களுக்குச் சாதகமாக்கி வருகின்றன. தமிழ் மக்கள் எந்தக் காரணத்துக்காகவும் தென்னிலங்கைக் கட்சிகளுக்கு வாக்களிக்கக்கூடாது. எதற்கும் சோரம்போகாத தமிழ்த் தேசியத்தின் மீது பற்றுறுதி கொண்ட வேட்பாளர்களை அடையாளங. கண்டு அவர்களை வெல்ல வைக்க முன்வரவேண்டும். – என்றும் கேட்டுக்கொண்டார்.

# பாதுகாப்புச் செயலாளர் அறுகம்பைக்கு விஜயம்



பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா அறுகம்பைப் பகுதிக்குக் கள ஆய்வு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

அண்மையில், அறுகம்பைப் பகுதியிலுள்ள பல சுற்றுலா தளங்களில், இஸ்ரேலியர்களை குறிவைத்து பயங்கரவாத தாக்குதல்கள் நடத்துவதற்கான திட்டம் குறித்த தகவல்கள் வெளியாகின.

இதனையடுத்து, முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளையடுத்து, இந்தத் தாக்குதல் திட்டம் தொடர்பில் பலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அதேநேரம், தாக்குதல் தொடர்பில் தங்களுக்கு நம்பகமான தகவல் கிடைத்துள்ளதால், அமெரிக்க உள்ளிட்ட சில நாடுகள், அறுகம்பைப் பகுதிக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு தங்கள் பிரஜைகளை முன்னதாக அறிவுறுத்தியிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் பாதுகாப்பு செயலாளர், அறுகம்பைப் பகுதிக்குக் கள ஆய்வு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அடுத்த தேர்தல்

தற்போதைய பொதுத் தேர்தல் முடிந்ததும், ஏற்கனவே வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிலுவையில் இருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல் ஆணையம் தயாராகி வருகின்றது.

இந்தப் பொதுத் தேர்தல் முடிந்ததும் தேர்தல் திணைக்கள ஊழியருக்கு சுமார் இரண்டு வார கால ஓய்வு அளித்துவிட்டு, மீண்டும் உள்ளூராட்சி தேர்தலுக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க தேர்தல் ஆணையம் முடிவு செய்து இருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அதன்படி பார்த்தால் நிலுவையில் உள்ள உள்ளூராட்சிர் தேர்தல் வரும் ஜனவரி மாதம் நடைபெறும்.

இதற்கிடையில் இந்தத் தேர்தல் தொடர்பில் புதிய அரசாங்கத்தின் தரப்பில் அமைச்சர் விஜித ஹேரத் தகவல் வெளியிட்டு இருக்கின்றார்.

இந்த உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் பழைய - சுமார் இரண்டு வருடங்களுக்கு முந்திய - வேட்பு மனுக்களை ரத்து செய்துவிட்டு, புதிதாக வேட்பு மனுக்களை ஏற்று தேர்தலை நடத்தும்படி பல தரப்புக்களும் கோரி இருக்கின்றன என்று கூறியுள்ள அமைச்சர் விஜித ஹேரத், அப்படிச் செய்வதற்காக உள்ளூராட்சித் தேர்தல் சட்டங்கள் திருத்தப்பட வேண்டும், அவற்றைத் திருத்தி, அதற்கேற்ப புதிய வேட்பு மனுக்களை ஏற்றுத் தேர்தலைப் புதிதாக நடத்த ஒழுங்கு செய்வோம் என்று கூறியிருக்கிறார்.

அரசாங்க நிர்வாகத்தில் அனுபவமற்ற அவரின் பேச்சாக இந்த கருத்து அமைந்துள்ளது.

புதிய நாடாளுமன்றம் நவம்பர் 21ஆம் திகதி கூடினால் அதற்குப் பின்னர் ஏதேனும் ஒரு சட்டத்தை கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு குறைந்தபட்சம் இரண்டு தொடக்கம் மூன்று மாதங்களாவது தேவைப்படும். ஆனால் நிலுவையில் உள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நீதிமன்ற உத்தரவு காரணமாக அதற்கு முன்னர் நடத்தி முடிக்க வேண்டிய கட்டாயத்தில் தேர்தல் ஆணையம் உள்ளது.

'உள்ளூராட்சித் தேர்தல் - 2023ஐ' ஏனைய தேர்தல்களுக்கு குந்தகம் விளைவிக்காமல் இயன்ற விரைவில் நடத்தும் படி உயர் நீதிமன்றம் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவு விடுத்து இருக்கின்றது. அதன்படி இந்தப் பொது தேர்தல் முடிந்ததும், அடுத்த 45 முதல் 50 நாள்களுக்குள் இந்த உள்ளூராட்சித் தேர்தலை தேர்தல் ஆணையம் நடத்தி முடிக்க வேண்டும். உயர் நீதிமன்ற உத்தரவுகளை உதாசீனப்படுத்தினால் என்ன நடக்கும் என்பது இப்போது விளக்கமறியலில் இருக்கும் குடிவரவு - குடியகல்வு ஆணையாளர் நாயகத்தின் நிலைமையைப் பார்த்த தேர்தல் ஆணையத்துக்கு நன்கு தெரியும்.

ஆகவே, இனிமேல் புதிதாகச் சட்டம் கொண்டு வந்து, நிலைமையை நேர்சீராக்க இருக்கும்அரசாங்கத்தின்எதிர்பார்ப்புகளுக்காக தேர்தல் ஆணையம் வாளாதிருக்க - காத்திருக்க - முடியாது. அது நீதிமன்ற உத்தரவில் குறிப்பிட்டிருப்பதன் பிரகாரம் 'உள்ளூராட்சித் தேர்தல் - 2023' ஐ உரிய காலத்தில் - விரைந்து - நடத்த நடவடிக்கை எடுக்கும்.

ஆகவேதான், புதிதாக சட்டம் கொண்டு வந்து நிலுவையில் இருக்கும் இந்த உள்ளூராட்சி தேர்தலை புதிதாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கத்தினால் செய்ய கால அவகாசம் கிடையாது என்பதுதான் நிலைமை.

நிலுவையில் உள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அது பிரகடனப்படுத்தப்பட்டபடி 2022 வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் நடத்தினால் புதிய வாக்காளர்களாக இதுவரை பதிவு செய்துள்ள சுமார் 5 லட்சம் பேருக்கு வாக்களிக்க முடியாது என்ற பின்னடைவைக் காட்டி, உயர் நீதிமன்றத்தில் ஏதேனும் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்தால் மாத்திரமே நீதிமன்றம் மூலம் நிலுவையில் உள்ள இந்தத் தேர்தலை நிறுத்தி, புதிதாக வேட்பு மனு பெற்று, தேர்தலை ஆரம்பத்தில் இருந்து தொடங்கி நடத்துவதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

நீதிமன்ற நடவடிக்கைக்கு வெளியில் அப்படி புதிதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஆரம்பத்தில் இருந்து நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வாய்ப்பு அடியோடு இல்லவே இல்லை என்பதுதான் நிலைமை. சட்டம் கொண்டு வந்து அதைச் செய்யப் போகிறார் என அமைச்சர் விஜித ஹேரத் கூறுவது நடைமுறைச் சாத்தியமற்ற - கற்பனை - கனவுதான்.

புதிய சட்டம் கொண்டு வந்து, அதன் அடிப்படையில் புதிதாக இத்தேர்தலை அறிவித்து நடத்தும் காலம் வரை இத்தேர்தல் நடைபெறாமல் இருக்காது. அதற்கு முன்னரே நீதிமன்ற உத்தரவுப்படி தேர்தல் நடந்துவிடும். அதை அப்படி நடக்காமல் தடுப்பதாயின் நீதிமன்றம் மூலம் தடை உத்தரவு பெறுவது ஒன்றே வழியாகும்.





# ஓட்டமாவடி மியாங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் மரணம்



ஓட்டமாவடி மியாங்குளம் – கொழும்பு வீதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்தில் நபரொருவர் மரணமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டமாவடி அக்கர் பள்ளிவாசல் வீதியைச் சேர்ந்த முகம்மது இஸ்மாயில் பாறூக் என்பர் தான் முகாமையாளராக பணிபுரியும் ரிதிதென்ன எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு கடமைக்குச் செல்லும் போதே விபத்துக்குள்ளாகி மரணமடைந்துள்ளார்.

இவர், ஓட்டமாவடி பாத்திமா பாலிகா வித்தியாலய ஆசிரியை திருமதி ஜெஸீமா என்பவரின் கணவராவார்.

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவர் மீது எதிரே வந்த சிறிய எல்வ் ரக லொறி மோதியதில் சம்பவ இடத்தில் அவர் மரணமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவரின் உடல் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்



# நுவரெலியா – கண்டி வீதியில் குடைசாய்ந்த கனரக வாகனம்

நுவரெலியா கண்டி பிரதான வீதியில் லபுக்கலை குடாஓயா பகுதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கனரக வாகனம் ஒன்று குடைசாய்ந்துள்ளது. இதனால் இவ்விதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியில் பாரிய வளைவு பகுதியில் திடீரென இயந்திரக் கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனால் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் புற்களை கொழும்பு துறைமுகத்திலிருந்து நுவரெலியா வழியாக அம்பேவல நியூசிலாந்து பாற்பண்ணைக்கு ஏற்றிச்சென்ற கனரக வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாகவும், இவ்விபத்தில் எவருக்கும் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து காரணமாக அவ்வீதியின் ஊடாக பயணித்த ஏனைய வாகனங்கள் வீதியின் இரு புறங்களிலும் பயணத்தை தொடர முடியாதவாறு நீண்ட வரிசையில் நின்றதன் காரணமாக சுமார் ஒரு மணிநேரம் மேற்படி வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

நுவரெலியா போக்குவரத்து பொலிஸார் போக்குவரத்தை சீர்செய்ய உதவியளித்தனர்.



# பச்சிளம் குழந்தையைத் தூக்கி வீசி இளம் தாய், கணவர் மீது தாக்குதல்

## சுன்னாகம் பொலிஸார் மீது குற்றச்சாட்டு

பச்சிளம் குழந்தையை தூக்கி வீசி, இளம் தாயார் மீதும் அவரது கணவர் உள்ளிட்டவர்கள் மீதும் சுன்னாகம் பொலிஸார் மூர்க்கத்தனமாக தாக்குதல் நடாத்தியுள்ளனர் எனப் பாதிக்கப்பட்ட பெண் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் தமது வாகனத்தில் குடும்பத்தினர் பயணித்துக்கொண்டிருந்த வேளை, அவர்களது வாகனத்தை மோட்டார் சைக்கிளில் முந்தி சென்றவர்கள் வாகனத்திற்கு முன்பாக தடுமாறி விழுந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

அதனை அடுத்து சம்பவ இடத்திற்கு சிவில் உடையில் வந்த பொலிஸார், வாகன சாரதியுடன் முரண்பட்டு, அவரைத் தாக்கியுள்ளனர்.

அதன்போது வாகனத்தில் இருந்த அவரது மனைவி, இரண்டு மாதங்களேயான தனது குழந்தையுடன் இறங்கி கணவன் மீது தாக்குதல் நடாத்தியவர்களை தடுக்க முற்பட்ட வேளை அவரது கையில் இருந்த குழந்தையை பறித்து எறிந்து தாயையும் தாக்கியுள்ளனர்.

அதனை அடுத்து சம்பவ இடத்தில் பொதுமக்கள் கூடியதும், சீருடையில் வந்த பொலிஸார் வாகனத்தையும் வாகனத்தில் இருந்தவர்களையும் வாகனத்துடன் பொலிஸ் நிலையம் அழைத்து சென்று, தாக்குதலுக்கு இலக்கானவர்களை கைது செய்தனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவரின் மனைவி தெரிவிக்கையில் –

நாங்கள் வாகனத்தில் பயணித்துக் கொண்டிந்த வேளை, மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் எம்மை முந்தி சென்று விபத்துக்கு உள்ளானர்கள். அவர்கள் மதுபோதையில் இருந்தமையால், நாங்களும் வாகனத்தை நிறுத்தி விட்டு, இருந்தோம்.

அப்போது சிவில் உடையில் வந்தவர்கள் எனது கணவரிடம் சாரதி அனுமதிபத்திரம், வாகன ஆவணங்களை கேட்டிருந்தனர். சிவில் உடையில் உள்ள உங்களுக்கு அதனை காண்பிக்க தேவையில்லை, விபத்து நடந்துள்ள இடத்திற்கு போக்குவரத்து பிரிவு பொலிஸாரை வரவழையுங்கள் எனக் கணவர் கூறினார்.

அதற்கு சிவில் உடையில் வந்திருந்தவர்கள் எனது கணவனை மூர்க்கத்தனமாக தாக்கினார்கள். அதனைத் தடுக்க சென்ற என்னையும் தாக்கி, எனது இரண்டு மாத குழந்தையையும், என் கையில் இருந்து பிடுங்கி எறிந்தனர்.

பின்னர் சீருடையில் வந்த பொலிஸார் வாகனத்தை பொலிஸ் நிலையம் எடுத்து சென்றமையுடப் எனது கணவரையும் கைது செய்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

அதேவேளை சம்பவ இடத்திற்கு சென்ற சட்டத்தரணி மணிவண்ணன், பார்த்தீபன் உள்ளிட்டோர், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஆதரவாக நின்றிருந்தனர்.

சட்டத்தரணி மணிவண்ணன், பொலிஸ் நிலையத்தினுள் சென்று கைது செய்யப்பட்டிருந்தவரை பார்வையிட்டு, சம்பவம் தொடர்பில் நேரில் கேட்டறிந்து கொண்டார்.

அது தொடர்பில் ஊடகங்களுக்கு சட்டத்தரணி மணிவண்ணன் கருத்து தெரிவிக்கையில் –

மதுபோதையில் பொலிஸார் அராஜகம் செய்வது பாரதூரமான அடிப்படை மனிதவுரிமை மீறல். இந்தக் குற்றச் செயலை செய்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் அனைவரும் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும். இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் நலன் சார்ந்து செயற்பட சட்டத்தரணிகள் ஆகிய நாங்கள் தயாராக இருக்கின் றோம்.

பொலிஸ் தடுப்பு காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களை நேரில் பார்வையிட்டு, கேட்ட போது, தம்மைப் பொலிஸ் நிலையத்தினுள் வைத்தும் பொலிஸார் கடுமையாக தாக்கியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு செல்ல உள்ளோம். இந்தச் சம்பவம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் சட்ட ரீதியாக முன்னெடுக்க நாங்கள் தயாராக உள்ளோம் என தெரிவித்தார்.

அதேவேளை பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு ஆதரவாக பொலிஸ் நிலையம் முன்பாக நின்ற மக்களை பொலிஸ் நிலையம் முன்பாக இருந்து களைந்து செல்லுமாறு பொலிஸார் பணித்து, மக்களை அங்கிருந்து விரட்ட முனைந்தனர்.

அதன் போது அங்கிருந்த யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வ.பார்த்தீபன் பொலிஸாரிடம் நியாயம் கேட்க முற்பட்ட வேளை, அவரைப் போதையில் நின்று குழப்பம் விளைவிப்பவராகக் கூறி பொலிஸார் தாக்க முற்பட்டுள்ளனர்.

பச்சிளம் குழந்தையை தூக்கி வீசி அராஜகமாக நடந்து கொண்ட பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தேர்தல் பரப்புரைக்காக இன்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் புதிய அலுவலகமானது நேற்றைய தினம் சனிக்கிழமை இலங்கை பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய வினால் திறந்து வைக்கப்பட்டு சில மணி நேரங்களில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# கேணல் பரிதியின் நினைவேந்தல் நிகழ்வு பிரான்ஸில் இடம்பெற்றது

பிரான்ஸ் பாரிஸ் நகரில் படுகொலை செய்யப்பட்ட கேணல் பரிதியின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு அவரின் வித்துடல் விதைக்கப்பட்ட ஒபே வில்லியே துயிலும் இல்லப் பகுதியில் கடந்த (08) வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு மாவீரர் பணிமனையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரைக் கிளிச்சி பிராங்கோ தமிழ்ச் சங்கப் பொறுப்பாளர் சச்சிதானந்தம் ஏற்றிவைத்தார்.



ஈகைச்சுடரினை மாவீரர் கேணல் பரிதியின் தாயார் ஏற்றிவைக்க, மலர் மாலையை அவரின் சகோதரர்கள் அணிவித்தனர்.

அகவணக்கம் செலுத்தப்பட்டு நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் சுடர் ஏற்றி மலர் வணக்கம் செய்திருந்தனர்.

நினைவுரையை பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு நிர்வாக செயற்பாட்டாளர் சத்தியதாசன் ஆற்றியிருந்தார். அவர் தனது உரையில், கேணல் பரிதியின் வாழ்வியல் தொடர்பாகவும் அவரின் நல் வழிகாட்டல்களை நாம் பின்பற்றிப் பயணிக்க வேண்டும் என்பதாக அவரது உரை அமைந்திருந்தது.









# கருணாவின் துரோகத்தை விட சங்கு செய்வது மகா துரோகம் !

## அம்பாறை நிலை குறித்து காரைதீவில் வேட்பாளர் கோடீஸ்வரன் சாட்டை!

( வி.ரி. சகாதேவராஜா)

கடந்த தேர்தலில் கருணா செய்தது தவறு. அவர் தெரியாமல் அதை செய்தார். ஆனால் இம் முறை தமிழருக்கான ஒரேஒரு பிரதிநிதித்துவம் ஊசலாடுகிறது என்று தெரிந்தும் இங்கு வரிந்து கட்டிக் கொண்டு சங்கு போட்டியிடுவது மகாதவறு. எனவே அம்பாறைத் தமிழர்களுக்கு கருணா செய்த துரோகத்தை விட சங்கு செய்கின்ற துரோகம் மகா துரோகம் ஆகும்.

– இவ்வாறு காரைதீவில் தனது பிரசார அலுவலகத்தை நேற்று சனிக்கிழமை மாலை திறந்து வைத்து பேசிய அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சி வேட்பாளருமான ஏ.கே. கோடீஸ்வரன் தெரிவித்தார் .

இம்முறை அம்பாறை மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி 60 ஆயிரம் வாக்குகளை பெற்று சரித்திரம் படைக்கும் என்றும் அவட் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

அன்று கருணா மட்டும் வந்து தமிழ் பிரதிநிதித்துவத்தை சிதறடித்தார். இன்று படகு, சைக்கிள், திசைகாட்டி, மணிக்கூடு என வந்து தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை அழிக்க புறப்பட்டு இருக்கின்றனர் .

இவர்களெல்லாம் கடந்த காலத்தில் இங்குள்ள தமிழ் மக்களுக்கு என்ன செய்தார்கள் என்பதை மக்கள் அறிவார்கள்.

தாங்கள் வெல்ல முடியாது என்று அறிந்தும் தெரிந்தும் களம் இறங்கி இருக்கின்றார்கள்.

புளொட் சித்தார்த்தன் இயக்கத்தில் இயங்கும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு சங்கு படு தோல்வி அடைய இருக்கின்றது. தெரிந்தும் சுரேஷ் சித்தரின் தேசிய பட்டியலுக்காக இங்கு அவர்கள் களமிறக்கப்பட்டு இருக்கின்றார்கள்.75 வருட கால பழந்தமிழ் கட்சியான எமது கட்சியை உடைப்பதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சதிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் எதுவுமே எடுபடாது .

நாங்கள் அம்பாறை மாவட்டத்தில் 2015 தொடக்கம் 2020 வரைக்கும் 1800 மில்லியன் பெறுமதியான அபிவிருத்தியைச் செய்து இருக்கின்றோம்.

இம்முறை வரலாற்றில் என்றும் இல்லாதவாறு இலங்கை தமிழரசுக் கட்சி 60 ஆயிரம் வாக்குகளை பெற்று சரித்திரம் படைக்க இருக்கிறது.

எனவே தமிழரசுக் கட்சி வெல்லப் போவது தெரிந்த விஷயம். அதுக்கு மட்டும் ஆதரவு அளித்து உங்களது வாழ்வை வளப்படுத்திக் கொள்ளுங்கள்.
– என்றார் .

வேட்பாளர் கே.யசோதரனும் கலந்து சிறப்பித்தார்.








# அம்பாறையில் தமிழர் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டால் முதல் துரோகி திசைகாட்டி; இரண்டாவது துரோகி வீடு!

## பாண்டிருப்பில் சங்கு வேட்பாளர் கிருஷ்ணா காட்டம்

**(வி.ரி. சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்டத்தில் இம்முறை மீண்டும் தமிழின பிரதிநிதித்துவம் இல்லாமல் போனால் அதற்கு முதல் காரணம் திசைகாட்டி. இரண்டாவது வீடு. இந்த பழிபாவத்தை இந்த இரண்டு கட்சிகளும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

– இவ்வாறு பாண்டிருப்பில் தனது கட்சிக்கான பரப்புரைக் காரியாலயத்தை திறந்து வைத்து பேசிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் ராஜ்குமார் பிரகாஷ் தெரிவித்தார்.

ரெலோ முக்கியஸ்தர் ஹெந்தி மகேந்திரன், வேட்பாளர்களான பி. கார்த்திக், த. கலைக்குமார் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர் .

இந்த திறப்பு விழாவில் பிரகாஷ் மேலும் பேசுகையில் –

திசைகாட்டியில் 5 சிங்களர்களும், நான்கு முஸ்லீம்களும், ஒரே ஒரு தமிழரும் இறக்கப்பட்டு இருக்கின்றார்கள் .

இந்த தமிழரால் 38 ஆயிரம் வாக்குகளை பெற முடியுமா? கடைசிவரையும் முடியாது . ஆக 2000 வாக்குகளை பெற்று அதனை ஏனைய சமூகங்களுக்கு தாரை வார்க்க அவர் விரும்புகின்றார்.

மற்றவர் வீதி அபிவிருத்தி பிரதி அமைச்சராக இருந்து இம்முறை தேர்தலில் போட்டியிடும் பிள்ளையான். அம்பாறை மாவட்டத்தில் அவர் ஒரு ஒழுங்கையாவது போட்டு இருக்கின்றாரா?

அம்பாறை மாவட்டத்தில் ஒற்றுமையாக தேர்தலில் நிற்பது சங்கு என்பதை மறந்துவிட முடியாது.

சிலவேளை நான்கு ஜே.வி.பியின் எம்பிக்கள் வந்தால் அம்பாறை மாவட்டத்தில் ஒரு தமிழரும் எம்பியாக வர முடியாது. – என்றார்.


















# கல்முனை மக்களுக்கு ஒருபோதும் துரோகம் இழைக்கப் போவதில்லை!

## மக்கள் கட்சியை பழிவாங்க கூடாது என்கிறார் வேட்பாளர் உதுமாலெப்பை

(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனை மக்களுக்கு நாங்கள் ஒருபோதும் துரோகம் இழைக்கப் போவதில்லை. வேட்பாளர் தீர்மானத்துக்காக மக்கள் கட்சியைப் பழிவாங்கக் கூடாது என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித் தேசிய அமைப்பாளர், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

அட்டாளைச்சேனையில் இன்று (10) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றும் போது,

வேட்பாளர்களைத் தீர்மானிக்கும் பொறுப்பு தலைமைத்துவத்திடம் உயர் பீடத்திடம் இருக்கின்றது. எனவே அதற்காக மக்கள் கட்சியை பழி வாங்க கூடாது. எமது கட்சி வாழ வேண்டும்.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். அப்பிரதிநிதி எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரியே.

அம்பாறை மாவட்டத்திலேயே மூன்று ஆசனங்கள் என்பது எங்களது கட்சி இலக்காகும். அரசியல் கருத்து வேறுபாடு பேதங்கள் பிரதேச வாதங்கள் இல்லாமல் மரச் சின்னத்துக்கு மக்கள் வாக்களிப்பார்களேயானால் மூன்று அல்லது இரண்டு ஆசனங்கள் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குக் கிடைக்கும்.

இன்று அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸுக்கு 80 வீதமான வாக்குகள் இருக்கும் பிரதேசமாக அட்டாளைச்சேனை பிரதேசமாக மாற்றப்பட்டிருக்கின்றது.

நான் இந்த தேர்தலிலே, உலமாக்கள் புத்திஜீவிகள் மற்றும் கட்சி போராளிகள் கேட்டுக் கொண்டதற்காகவே நாங்கள் வேட்பாளராக போட்டியிடுகின்றேன். அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை மற்றும் தீகவாவி போன்ற பிரதேசங்கள் உள்ளடங்களாக சுமார் 35,857 வாக்குகள் இருக்கின்றது இதில் 20,000 வாக்குகள் முஸ்லிம் காங்கிரஸுக்கு இருக்கும் படியாக கிடைக்கின்ற விதத்தில் அட்டாளச்சேனை பிரதேசம் மாற்றப்பட்டிருக்கின்றது. இது எங்களது முயற்சியால் மாற்றப்பட்டிருக்கின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள முஸ்லிம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு பேச்சு வார்த்தைகள் மூலம்தான் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.- என்றார்.

# ஈழத்து சௌந்தரராஜன் விஜயரத்தினம் 82 ஆவது வயதில் இயற்கை எய்தினார்

பிரபல பக்தி திரை இசைப்பாடகர் ஈழத்து சௌந்தரராஜன் என அழைக்கப்படும் வைரப்பிள்ளை விஜயரத்தினம் 82 ஆவது வயதில் வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் வடக்கைச் சேர்ந்த இவர் 1942 ஆம் ஆண்டு பிறந்தார். தமிழக திரை இசைப் பாடகர் ரி.எம். சௌந்தரராஜனின் குரல் வளத்தை கொண்ட இவர் தனது 15 ஆவது வயதிலேயே பாடத் தொடங்கினார்.

1965 ஆம் ஆண்டு தமிழகப் பாடகர் சௌந்தராஜன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்விலே பாடுவதற்காக வந்தவேளை பாடகர் சௌந்தரராஜன் தங்கியிருந்த இடத்துக்கு சென்று அவரைச் சந்தித்து அவர் பாடிய பக்தி இசைப்பாடல்கள் சிலவற்றைப் பாடிக்காட்டினார்.



அவருக்கு முன்னால் பாடிய முதல் பாடல் ‘முருகா நீ வரவேண்டும்’ என்ற பக்திப்பாடலாகும்.

ஈழத்து பாடகரது பாடலைக்கு கேட்டு அசந்து போன ரி.எம்.எஸ். ஹாட்லிக் கல்லூரி மேடையிலேயே சில பாடல்களைப் பாட அனுமதி வழங்கினார். அத்துடன் விஜயரத்தினத்துக்கு ஈழத்து சௌந்தரராஜன் என்ற பட்டத்தை சூட்டியிருந்தார். அன்றிலிருந்து ஈழத்து சௌந்தரராஜன் என்று அழைக்கப்பட்டு வரும் விஜயரத்தினம் வடக்கில் உள்ள அத்தனை இசைக்குழுக் கச்சேரிகளில் கலந்து கொண்டு பாடல்களை மேடைகளில் பாடி ரசிகர்களின் ஏகோபித்த பேரபிமானத்தை பெற்றிருந்தார்.

60 ஆண்டுகளுக்கு மேலாக மேடைகளில் பாடி வந்த இவர் ரி.எம்.எஸ். பக்தி இசை, திரை இசைப்பாடல்களை மனதில் பாடமாகவே வைத்திருந்தார்.

வடமராட்சி வல்லிபுரக் கோயில் உள்ளிட்ட வல்வெட்டித்துறை, சுதுமலை, ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்களுக்கென உருவாக்கப்பட்ட பக்தி பாடல்களையும் பாடியுள்ளார்.

சுமார் 20 ஆண்டுகள் அவர் மேடையில் பாட முடியாத நிலையில் வீட்டில் இருந்தார்.

கடந்த மூன்று மாத காலமாக சுகவீனமாக இருந்த நிலையில் இயற்கை எய்தினார்.



# சாவகச்சேரி இந்துக் கல்லூரி நடனக் குழுவினர் சாதனை!

(எஸ்.கீதபொன்கலன்)

அகில இலங்கை பரதநாட்டிய, கர்நாடக சங்கீத தேசிய மட்டப் போட்டியில், சாவகச்சேரி இந்துக் கல்லூரி நடனக் குழுவினர் மூன்றாம் இடத்தை பெற்றனர்.

கல்வி அமைச்சால் திருகோணமலையில் நேற்று சனிக்கிழமை (09) நடத்தப்பட்ட இந்தப் போட்டியில், 1000 இற்கும் அதிக மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கான பிரிவில், "கொடுகொட்டி" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட குழு நடனப் போட்டியில் இவர்கள் மூன்றாம் இடத்தைப் பெற்றனர்.

வலய, மாவட்ட மட்டங்களில் ஆரம்ப போட்டிகள் நடத்தப்பட்டு மாகாண நிலைக்கு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் மத்தியில் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் முதலிடத்தை பெற்ற பாடசாலைக் குழுக்கள் இந்த இறுதித் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றி இருந்தன.

வடமத்திய மற்றும் தென் மாகாணம் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களின் தமிழ் மொழிப் பாடசாலைகள் அனைத்தும் இந்தத் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றியிருந்தன.

# கண்டியில் தமிழ் பேசும் மக்கள் பிரிந்து செயற்பட்டால் தலைகுனிவே!

## வேட்பாளர் பாரத் அருள்சாமி தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

சமூகம், பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றது. இவற்றை முறியடிப்பதற்கு ஒற்றுமையே முக்கியம். பொருளாதார ரீதியாக இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும் நாம், இந்தத் தேர்தலில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று நீங்கள் அறிவீர்கள். கண்டி மாவட்டத்தின் தமிழ் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றும் வகையிலும், அதனை வென்றெடுக்கும் வகையிலும் இந்த தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். இல்லையேல் தலை குனிவுடன் வாழவேண்டிவரும்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் கண்டி மாவட்ட வேட்பாளர் பாரத் அருள்சாமி இவ்வாறு தெரிவித்தார்.

கண்டி கெலாபொக்க பகுதியில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

இந்தத் தேர்தலில் நாங்கள் தொலைபேசி சின்னத்தில் களமிறங்கியுள்ளோம். இந்த சந்தர்ப்பத்தில் உங்களின் ஒத்துழைப்பு மாத்திரமின்றி, நீங்களும் பங்குதாரர்களாக களத்தில் நின்று பிரசாரப் பணிகளை மேற்கொள்வதன்



மூலமே, நமது வெற்றி பலமடையும். பிரிந்துவிடுவோமேயானால் வருங் காலத்தில் தலைகுனிவோடு வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுவோம். எனவே, வாக்காளர்களாகிய நீங்கள் யதார்த்தத்தைப் புரிந்து, ஒன்றுபட்டு, எமக்கு வெற்றியைப் பெற்றுத்தாருங்கள்.

நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகவோ, மாகாண சபை உறுப்பினராகவோ, பிரதேச சபை உறுப்பினராகவோ அதாவது எந்தவிதமான அரசியல் பதவிகளும் இல்லாமல் கண்டி மாவட்ட மக்களுக்குத் தேவையான அனைத்து வேலைத் திட்டங்களையும் செய்துக் கொடுத்துள்ளேன்.

இன அடையாளம், வீடமைப்பு திட்டம், கல்வி, பொருளாதார அபிவிருத்தி எனப் பல வேலைத்திட்டங்களை செய்து வந்துள்ளேன்.

இன்று நாம் எமது பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் போரில் ஈடுபட்டுள்ளோம். எனவே, கண்டி மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும். அதனை இல்லாது செய்வதற்கு முன்னெடுக்கப்படும் சதிகளை முறியடிக்க வேண்டும். சிறுபான்மையின மக்களின் பிரதிநிதித்துவம் நாடாளுமன்றத்தில் நிச்சயம் ஒலிக்க வேண்டும்.

எனவே, இந்த முறை எனக்கு சந்தர்ப்பம் ஒன்று தாருங்கள் நிச்சயமாக கண்டி மாவட்ட தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படும்.- என்றார்.





# சிறுபான்மையினர் எதிர் நோக்கும் பிரச்சினை குறித்த கலந்துரையாடல்

(இஸட்.ஏ.றஹ்மான்)

தற்போதய சூழலில் வட கிழக்கு சிறுபான்மையின மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமான மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்துக்கான செயலமர்வு, கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புகாரி முஹமட் தலைமையில் இன்று (10) மட்டக்களப்பு கல்லடி கிரீன் கார்டின் ஹோட்டலில் நடைபெற்றது. இந்த நிகழ்வின் பங்கு பற்றுனர்களாக சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங் களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வைத் திட்ட முகாமையாளர் பேரம்பலம் ரேணுகா மற்றும் வாணி சைமன் ஆகியோர் நெறிப்படுத்தினர்.

# திகாமடுல்லவில் மூவின மக்களுடனும் இணைந்தது எமது அரசியல் பயணம்!

## வேட்பாளர் அப்துல் கரீம் தெரிவிப்பு



(எம். எப். றிபாஸ்)

திகாமடுல்ல மாவட்டத்தில் மூவின மக்களையும் இணைத்துக் கொண்டு எங்களது அரசியல் பயணங்களை மேற்கொள்வோம் என்று சுயேச்சை குழு 15 ஆப்பிள் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் எம்.எஸ்.அப்துல் கரீம் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் நேற்று(09) இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில், அம்பாறை மாவட்டத்தில் வாழும் சகல மக்களும் ஒற்றுமையுடனும், சந்தோசத்துடனும் வாழ்ந்து வருகின்ற இந்த நிலையில் மாற்றுக் கட்சி வேட்பாளர்கள் சிலர் பிரதேச வாதங்களையும், இனவாதங்களையும் தூண்டி, மக்களுக்கிடையில் தேவையில்லாத குழப்ப நிலைமைளை உண்டு பண்ணுகிறார்கள்.அவ்வாறான நிலைமைகளை மாற்றி எல்லோரும் நன்மையடையக் கூடிய வகையில் எனது அபிவிருத்திப் பணிகளும், வாழ்வாதார திட்டங்களும் எதிர்காலத்தில் அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஆகவே, வாக்காளர்களாகிய நீங்கள் நன்றாக சிந்தித்து எங்களது சுயேட்சை குழு 15 அப்பிள் சின்னத்துக்கும் பத்தாம் இலக்கத்துக்கும் புள்ளடியிட்டு ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக என்னை நீங்கள் தெரிவு செய்கின்ற போது இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் மக்கள் பணிகளையும் செய்வேன்.- என்றார்.





# முன்னாள் எம்.பி. நடராசா ரவிராஜின் 18 ஆவது நினைவு தினம் அனுஷ்டிப்பு

(த.சுபேசன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான அமரர் நடராசா ரவிராஜின் 18 ஆவது நினைவு தினம் யாழ். சாவகச்சேரியில் அமைந்துள்ள அன்னாரது நினைவுச் சிலையருகில் இன்று (10) ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது அமரர் ரவிராஜின் பாரியார் சசிகலா ரவிராஜ், ஈகைச் சுடர் ஏற்றி நினைவஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து ரவிராஜின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அமரர் நடராஜா ரவிராஜ், 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி கொழும்பு நாரஹேன்பிட்டிய விலுள்ள அவரது இல்லத்தில் இருந்து அலுவலகத்துக்குச் செல்லும் வழியில் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

அமரர் ரவிராஜ், 1998 - 2001 ஆண்டுகளில் யாழ். மாநகர சபை உறுப்பினராகவும், பிரதி முதல்வராகவும், முதல்வராகவும் பதவி வகித்ததுடன் அதனைத் தொடர்ந்து 2001 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு இரு தடவைகளும் நாடாளுமன்றுக்குத் தெரிவாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





# மக்களுக்கான எனது பயணம் தொடரும்!

## வேட்பாளர் அனுஷா சந்திரசேகரன் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

மலையக அரசியல் வரலாற்றில் 1994 ஆம் ஆண்டு எனது தந்தை மாற்றத்தை ஏற்படுத்தினார். உரிமை அரசியலுக்கும், அபிவிருத்திக்கும் முன்னுரிமை வழங்கினார். அதே வழியில் மக்களுக்கான எனது பயணம் தொடரும். மக்களுக்காக எனது குரல் நாடாளுமன்றத்தில் நிச்சயம் ஓங்கி ஒலிக்கும்.

இவ்வாறு ஜனநாயக ஐக்கிய குரல் கட்சியின் நுவரெலியா மாவட்ட தலைமை வேட்பாளர் சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

இராகலை ஹைபொரஸ்ட் பகுதியில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அனுஷா மேலும் கூறியவை வருமாறு,

1994 ஆம் ஆண்டு சுயேச்சையாக களமிறங்கி எனது தந்தை வெற்றி பெற்றார். அவர் மக்களின் குரலாக நாடாளுமன்றத்தில் செயற்பட்டார். ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக மாறினார். மலையகத்தில் தனி வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தார்.

எனினும், எமது தலைவரான சந்திரசேகரனின் மறைவின் பின்னர், எமது மக்களுக்கான நாடாளுமன்ற குரல் மௌனித்துள்ளது என்றே கூற வேண்டும். காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. எமது மக்களுக்கான அவரிடம் பல்வேறு திட்டங்கள் இருந்தன. சமூகம் தொடர்பில் அவரிடம் கனவும் இருந்தது. எனவே, அந்த வெற்றிடத்தை என்னால் நிச்சயம் நிரப்ப முடியும். மலையகத்தை மாற்றத்தை நோக்கி அழைத்துச் செல்ல முடியும்.

கடந்தமுறை தனித்து வந்தேன், 17 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் கிடைக்கப்பெற்றன. அப்போது தொழிற்சங்கமில்லை, கட்சி இல்லை என்றார்கள். இன்று கட்சியில் வந்துள்ளேன், அதற்கு வேறு கதை கூறுகின்றனர். ஐக்கிய ஜனநாயகக் குரல் என்ற புதிய தேசிய கட்சியில் நான் இந்த முறை போட்டியிடுகின்றேன். ஏனைய தேசிய கட்சிகள் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. புதிய முகங்கள் ஊடாக நிச்சயம் முன்னோக்கி செல்லலாம்.

நாம் கட்சிக்கு வாக்கு சேர்க்கவில்லை. நமது மக்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தவே வாக்கு கேட்கின்றேன். காணி உரிமை, அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் பற்றி பேசி அவற்றை வெல்ல வேண்டும். - என்றார்.

# இந்திய - யாழ்ப்பாண ரோட்டறி கழகத்தினர் வெள்ளி சந்திப்பு!

(த.சுபேசன்)

இந்திய ரோட்டரிக் கழக அங்கத்தவர்களுக்கும் யாழ்ப்பாணம் ரோட்டரிக் கழக அங்கத்தவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று வெள்ளிக்கிழமை (08) யாழ்ப்பாணம் - அரியாலையில் இடம் பெற்றது.



இந்திய ரோட்டரிக் கழகங்களுடனான சந்திப்பில் சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம், நல்லூர் ரோட்டரிக் கழகம், யாழ்ப்பாண ரோட்டரிக் கழகம் மற்றும் வவுனியாவில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ரோட்டரிக் கழக அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.



இதன்போது சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தால் யாழ்ப்பாணம் விழிப்புணர்வற்றோர் சங்கத்திற்கு 165 வெள்ளைப் பிரம்புகள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்திய துணைத் தூதர் சாய் முரளி கலந்து கொண்டார்.

இந்தியன் ரோட்டரிக் கழக 3132 பிரிவு ஆளுநர் ராம் பிரபு, இந்திய ரோட்டரிக் கழக முன்னாள் ஆளுநர் சம்பத் குமார, தன் வந்திரி செயற்றிட்ட இணைப்பாளர், இந்திய ரோட்டரிக் கழக அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# டில்லி கணேஷ் காலமானார்



நடிகர் டில்லி கணேஷ் காலமானார். அவருக்கு வயது 80. சென்னை – இராமாபுரத்தில் உள்ள வீட்டில் அவர் நேற்று இரவு காலமானார்.

தமிழ் சினிமாவில் பல்வேறு கதாப்பாத்திரங்களில் அவர் நடித்துள்ளார். கே.பாலச்சந்தரின் 'பட்டின பிரவேசம்' படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமானார். இந்திய விமானப்படையில் பணியாற்றியவர். நடிப்பின் மீது ஏற்பட்ட ஆர்வம் காரணமாக பணியை துறந்தார். நாடகங்களிலும் நடித்துள்ளார்.

குணச்சித்திர வேடம், நகைச்சுவை, வில்லனாகவும் நடித்துள்ளார். டிவி சீரியல் மற்றும் குறும்படங்களிலும் நடித்துள்ளார். வயது முதிர்வு காரணமாக உடல் நலம் பாதிக்கப்பட்டு அவர் உயிரிழந்தார். அவரின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது உடலுக்கு உறவினர்கள் மற்றும் திரை உலகினர், ரசிகர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

திருநெல்வேலிக்கு அருகில் உள்ள வல்லநாடுதான் அவரது சொந்த ஊர். படித்துவிட்டு, ஏர்ஃபோர்ஸில் வேலை. தலைநகர் டில்லியில் வேலை பார்த்தபோது அங்கே நாடகம் போட்டதுதான் அவருக்கு நடிப்பில் பிள்ளையார் சுழி. பின்னர் சென்னைக்கு வந்து காத்தாடி ராமமூர்த்தியுடன் நட்பு ஏற்பட, அவரின் நாடகக் குழுவில் இணைந்தார்.

டில்லி கணேஷின் சினிமா பிரவேசம் 'பட்டினப்பிரவேசம்' மூலமாகத்தான் அமைந்தது. இதையடுத்து, கொஞ்சம் கொஞ்சமாக நல்ல கதாபாத்திரங்கள் வர ஆரம்பித்தன.

எந்தப் படத்தில் நடித்தாலும், எந்தக் பாத்திரம் நடித்தாலும் அதில் எவரையும் பின்பற்றாமல் நடிப்பது அவரின் பலம்.

'டௌரி கல்யாணம்', 'சம்சாரம் அது மின்சாரம்' என ஒருபக்கம் விசு தொடர்ந்து பயன்படுத்தினார். 'புன்னகை மன்னன்', 'சிந்து பைரவி', 'உன்னால் முடியும் தம்பி' என்று பாலசந்தர் பல படங்களில் கொடுத்ததெல்லாம் அற்புத கதாபாத்திரங்கள். அதிலும் 'சிந்து பைரவி'யின் மிருதங்க குருமூர்த்தி கதாபாத்திரம் மறக்கவே முடியாது.'புன்னகை மன்னன்' சமையல்கார கதாபாத்திரம், கமலின் அப்பா கதாபாத்திரம் அற்புதமாகச் செய்திருப்பார்.

இயக்குநர் துரையின் 'பசி' படத்தில், குப்பத்தில் வாழ்கிற, சைக்கிள் ரிக்ஷா ஓட்டுகிற கதாபாத்திரத்தில், அட்டகாசம் பண்ணியிருப்பார். தொடர்ந்து சின்னதும் பெரிதுமாக நிறைய படங்களில் நடித்தார். அப்பா பாத்திரங்களில் நடித்தார். 'பொல்லாதவன்' படத்திலும் 'மூன்று முகம்' படத்திலும் பல படங்களிலும் பொலிஸ் வேடத்தில் நடித்தார்.

கமலின் படங்களில் டெல்லி கணேஷுக்கு ஏதேனும் ஒரு வேடம் நிச்சயம் இருக்கும். 'அபூர்வ சகோதரர்கள்' படத்தில் நாகேஷை பிரதான வில்லனாக்கினார். டில்லி கணேஷையும் வில்லனாக்கினார். 'அவ்வை சண்முகி'யிலும் முக்கிய பாத்திரத்தில் நடித்திருப்பார்.

கருப்பு வெள்ளை காலத்தில் தொடங்கிய டில்லி கணேஷின் பயணம்... 'நேர்கொண்ட பார்வை'யென கமல்,ரஜினி, விஜயகாந்த், பிரபு, சத்யராஜ், கார்த்திக், முரளி, மோகன், அஜித், விஜய் காலம் வரை தொடர்ந்தது. மகத்தான நடிகரான டில்லி கணேஷ் மறைந்திருந்தாலும் அவர் நடித்த பாத்திரங்கள் ஒவ்வொன்றும் மறக்க முடியாத நினைவுகளாக பார்வையாளர்களின் நினைவுகளில் இருக்கும்.

# மகாராஷ்டிர சட்டபேரவைத் தேர்தலுக்கான பா.ஜ.கவின் தேர்தல் அறிக்கை வெளியீடு



மகாராஷ்டிர சட்டபேரவைத் தேர்தலுக்கான பா.ஜ.க. தேர்தல் அறிக்கையை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா இன்று வெளியிட்டார்.

மும்பையில் நடந்த தேர்தல் அறிக்கை வெளியிட்டு நிகழ்ச்சியில் துணை முதல்வர் தேவேந்திர பட்நாவிஸ், மாநில பா.ஜ.க. தலைவர் சந்திரசேகர பவன்குலே, மும்பை பாஜக தலைவர் ஆஷிஷ் ஷெலர், மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் உள்ளிட்ட மூத்த தலைவர்கள் கலந்து கெண்டனர்.

மகாராஷ்டிரா மாநில தேர்தலுக்கான பா.ஜ.கவின் தேர்தல் அறிக்கை குழுவுக்கு தலைமை தாங்கிய பா.ஜ.கவின் மூத்த அமைச்சர் சுதிர் முன்கந்திவார் கூறுகையில்,

"இந்த தேர்தல் அறிக்கை, மகாராஷ்டிர மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. எங்களின் தலைமையின் கீழ் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜி.எஸ்.டி.பி) குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு மகாயுதி அரசு மிகவும் இன்றியமையாதது. எங்களின் இரட்டை இஞ்சின் அரசு சாலை உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதிலும், இணைப்பு வசதிகளை மேம்படுத்துவதிலும் இன்னும் அதிக சாலைகளை உருவாக்குவதிலும் கவனம் செலுத்துகிறது. ஐந்து டிரில்லியன் டொலர் பொருளாதாரத்தை உருவாக்குவதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். நாங்கள் வெற்றி பெற்ற பின்பு இந்த அறிக்கையில் உள்ள ஒவ்வொரு வாக்குறுதியையும் நிறைவேற்றுவோம்" – என்றார்.

'தொலைநோக்கு ஆவணம்' என்று வர்ணிக்கப்படும் பா.ஜ.கவின் இந்த தேர்தல் அறிக்கையில், மிஷன் ஒலிம்பிக் 36, விவசாயிகளுக்கான ஆதரவு, லட்தி பெஹ்னா யோஜனா, சுகாதாரம் உள்ளிட்ட பல முன்னெடுப்புகள் அடிக்கோடிட்டு காட்டப்பட்டுள்ளன.

நிகழ்ச்சியில் பேசிய உள்துறை அமைச்சர் அமித் ஷா,

"சுதந்திர இந்தியாவுக்கும் சமூக சீர்திருத்தத்துக்கும் மகாராஷ்டிரா எப்போதும் வழிகாட்டியுள்ளது. இந்த அறிக்கை மாநிலத்தின் விருப்பங்களை பிரதிபலிக்கிறது. இந்த தேர்தல் அறிக்கை மகாராஷ்டிர மக்களின் உண்மையான தேவைகள் மற்றும் விருப்பங்களை வெளிப்படுத்துகிறது. சத்திரபதி சிவாஜி மகாராஜாவும் இங்கே இருந்துதான் தனது பயணத்தைத் தொடங்கினார்.

இந்த அறிக்கை மாநிலத்தின் உணர்வினை வெளிக்காட்டுகிறது. விவசாயிகளை மதிப்பது மற்றும் பெருமை உணர்வினை வளர்ப்பதற்கு பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் கவனம் செலுத்துகிறது. இந்த அரசு பாதுகாப்பான மகாராஷ்டிராவை உருவாக்குவதற்கு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது." – என்றார்.



# இஸ்ரேல் - ஹமாஸ் மத்தியஸ்த பேச்சிலிருந்து கட்டார் விலகல்

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்தராக செயற்பட்டுவந்த கட்டார் அந்தப் பணியை இடைநிறுத்தியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பேச்சுவார்த்தைக்கு ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் தங்கள் விருப்பத்தைக் காட்டும்போது, அந்தப் பணிகள் மீண்டும் தொடங்கும் என்று கட்டார் குறிப்பிட்டுள்ளது.

கட்டாரில் ஹமாஸ் பிரதிநிதிகள் இருப்பதை வொஷிங்டன் இனி ஏற்காது என்று சிரேஷ்ட அமெரிக்க அதிகாரிகள் கூறியதை அடுத்து, காசாவில் போரை நிறுத்துவதற்கான புதிய திட்டங்களை பாலஸ்தீனிய குழு நிராகரிப்பதாகக் குற்றம் சாட்டியுள்ளது.

மத்தியஸ்தப் பேச்சுக்களிலிருந்து விலகிவிட்டதாகத் தெரிவித்த போதிலும், டோஹாவில் உள்ள ஹமாஸின் அரசியல் அலுவலகம் இனி அதன் நோக்கத்தை நிறைவேற்றாது என கூறுவது தவறானது எனக் கட்டார் தெரிவித்துள்ளது.




# ட்ரம்ப்பை கொல்ல முயற்சி பின்னணியில் ஈரான்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் போட்டியிட்ட டொனால்ட் ட்ரம்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டபோது அவரை கொலை செய்ய 2 முறை முயற்சி நடந்தது. எனினும் அவர் தப்பிவிட்டார்.

இந்நிலையில், இது தொடர்பாக அமெரிக்காவில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 2008 ஆம் ஆண்டில் அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்ட ஆப்கானிஸ் தான் நாட்டைச் சேர்ந்த பர்ஹத் ஷகேரி, டொனால்ட் ட்ரம்பை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக அதில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் ஈரானிய இஸ்லாமிய புரட்சிகர காவலர் படை (ஐ.ஆர்.ஜி.சி) உள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், நியூயோர்க் நகரில் வசித்து வரும் ஈரான் அரசு எதிர்ப்பாளரை கொலை செய்ய முயன்ற வழக்கில் ஷகேரி மற்றும் 2 பேர் பேர் மீது நேற்று முன்தினம் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதில் 2 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், ஷகேரி ஈரானில் வசிப்பது தெரியவந்துள்ளது.

டொனால்ட் ட்ரம்ப்பை படுகொலை செய்யும் பொறுப்பை ஐ.ஆர்.ஜி.சி. அதிகாரி ஒருவர் கடந்த செப்டம்பர் மாதம் ஷகேரியிடம் ஒப்படைத்ததாக அந்த வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஷகேரி ஐ.ஆர்.சி.ஜி. அதிகாரிகளை சந்தித்ததாகவும், 7 நாள்களில் ட்ரம்ப்பை கொலை செய்வதற்கான திட்டத்தை வழங்க வேண்டும் என அவரிடம் கேட்டதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இது நடக்காத பட்சத்தில் இந்த திட்டத்தை தேர்தல் முடியும் வரை தள்ளிப்போடுமாறும் அறிவுறுத்தி உள்ளனர். ஏனெனில், தேர்தலில் ட்ரம்ப் தோற்றுவிட்டால், அவரை கொலை செய்வது சுலபம் என ஐ,ஆர்,ஜி,சி, கருதியது.

குணம்ஸ் சுப்பர்மார்க்கட்
Gsm
GUNAAM SUPERMARKET

# குணம்ஸ்
## சுப்பர் மார்க்கட்
## GUNAAM'S SUPER MARKET

# Gunams super market super deal

**08, 09, 10/11/2024**

100 $ மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு
900g Mari Biscuit
**இலவசம்**




*Open until 10:00 PM.*

1145 Morningside Ave, Toronto, ON M1B 0A7
Contact : 416 283 9998

பக்கங்கள் 02

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 10/11/2024

## கனடாவில் ரொறன்ரோவில் காணாமல் போன பெண் மீட்பு

கனடாவில் ரொறன்ரோவில் காணாமல் போன பெண் ஒருவர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

ரொறன்ரோ பொலிஸார் இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள் ளனர். 33 வயதான பெண் 02



# கனடா சீக்கியர்கள் அனைவருமே காலிஸ்தான் ஆதரவாளர்கள் அல்லர்

## பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ விளக்கம்

கனடாவில் உள்ள அனைத்து சீக்கியர்களும் காலிஸ்தான் ஆதரவாளர்கள் அல்லர் என்றும் பிரதமர் மோடி ஆதரவாளர்கள் ஒட்டுமொத்த இந்துக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் அல்லர் எனவும் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கனடா நாடாளுமன்றத்தில் சமீபத்தில் நடைபெற்ற தீபாவளி கொண்டாட்டத்தில் பேசிய ஜஸ்டின் ட்ரூடோ-

"கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் பலர் உள்ளனர். ஆனால் அவர்கள் ஒட்டுமொத்த சீக்கிய சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. அதேபோல், கனடாவில் பிரதமர் மோடியின் அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் உள்ள னர். ஆனால் அவர்கள் கனடாவில் உள்ள அனைத்து இந்துக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை." - என்றார். 02

# தீ விபத்தில் சிக்கி ஒருவர் உயிரிழப்பு






கனடாவில் இடம்பெற்ற தீ விபத்துச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கனடாவின் இட்டோபீகொக் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விலோவிரிட்ஜ் மற்றும் எக்லின்டன் வீதிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள வீடொன்றில் தீ விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தீ விபத்தில் சிக்கிய ஒருவரை தீயணைப்புப் படையினர் மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும் மேற்படி நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த தீ விபத்துச் சம்பவத்தில் வேறு எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனவும் தீ விபத்திற்கான காரணங்கள் எதுவும் கண்டறியப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# திருட்டு வாகனங்களை விற்பனை செய்தவர் கைது



கனடாவின் டொரன்டோ நகரில் அமைந்துள்ள கார் விநியோக நிறுவனம் ஒன்றின் பணியாளர்கள் திருடப்பட்ட வாகனங்களை விற்பனை செய்துள்ளனர்.

மேற்படி நபர்களுக்கு எதிராக சுமார் 176 குற்றச்சாட்டு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக இந்த நபர்கள் இவ்வாறு திருட்டு வாகனங்களை விற்பனை செய்துள்ளமை தெரிய வந்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டு கார் விநியோக நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வரும் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மோசடியான முறையில் திருடப்பட்ட வாகனங்களை விற்பனை செய்துள்ளனர் என விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

தங்களது நிறுவன பதவி நிலையை பயன்படுத்தி இந்த நபர்கள் மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

கார் விநியோக நிறுவனத்தில் பணியாற்றி வரும் காரணத்தினால் கார்களை கொள்வனவு செய்பவருக்கு எவ்வித சந்தேகமும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்கள் இருவரும் சுமார் 22 வாகனங்களை மோசடியான முறையில் விற்பனை செய்துள்ளனர்.

# 2025 தேர்தலில் ட்ரூடோ காணாமல் போய்விடுவார்



## எலான் மஸ்க் கருத்து

காலிஸ்தான் பயங்கரவாதி எதிராக வன்முறையை தூண்ட இந்திய உள்துறை மந்திரி அமித் ஷா திட்டமிட்டுள்ளார் என கனடா அமைச்சர் டேவிட் மோரிசன் சில நாளகளுக்கு முன்பு பகிரங்கமாக குற்றம்சாட்டிருந்தார்.

இதற்கு இந்திய அரசாங்கம் கடும் கண்டனம் தெரிவித்திருந்தது.

இப்படி தொடர்ச்சியாக இந்தியா - கனடா இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவுடன் மோதல் போக்கை கடைபிடித்து வருவதால் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிற்கு உள்நாட்டிலும் உலக நாடுகள் மத்தியிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், உலக பெரும் பணக்காரர் எலான் மஸ்க், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிற்கு எதிராக கருத்து தெரிவித்துள்ளார்.

எலான் மஸ்க் இது தொடர்பாக தனது எக்ஸ் தளத்தில் கூறுகையில்,

“கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வரவிருக்கும் தேர்தலில் காணாமல் போய்விடுவார்” எனக் கூறியுள்ளார்.

கனடாவில் 2025 இல் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், எலான் மஸ்க் இவ்வாறு கூறியிருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் இவ்வாறு தென் இட்டுபிகோக் பகுதியில் மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் பாதுகாப்பாக இருக்கின்றார் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பெண்ணுக்கு மருத்துவ பரி சோதனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கள் கிழமை காணாமல் போன அந்தப் பெண், புதன்கிழமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் கண்டு பிடிக்கப்பட்டமை குறித்து குடும்பத்தினர் பெரும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

## கனடா சீக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்மூலம், கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் இருப்பதை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஒப்புக்கொண்டுள்ளார். காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதை அடுத்து இந்த விவகாரம் குறித்து கடந்த ஆண்டு செப்டம்பரில் பேசிய ஜஸ்டின் ட்ரூடோ, ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில், இந்திய அரசு நிறுவனங்களுக்கு ‘சாத்தியமான’ தொடர்பு இருப்பதாகக் குற்றம் சாட்டி இருந்தார். இதையடுத்து, இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் பாதிப்பு ஏற்படத் தொடங்கியது.

ட்ரூடோவின் இந்த குற்றச்சாட்டுகளை அபத்தமானது என்று இந்தியா நிராகரித்தது. மேலும், கனடா அரசால் குறிவைக்கப்பட்ட அந்நாட்டில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளை இந்தியா திரும்ப அழைத்துக்கொண்டது.

அதோடு, இந்தியாவில் உள்ள 6 கனேடிய தூதரக அதிகாரிகளை வெளியேற்றியது. கனேடிய மண்ணில் இருந்து செயல்படும் காலிஸ்தான் ஆதரவு சக்திகளுக்கு கனடா இடம் கொடுப்பதுதான் இரு நாடுகளுக்கும் இடையேயான முக்கியப் பிரச்சினை என்று இந்தியா கூறி வருகிறது.

கடந்த வாரம், கனடாவின் பிராம்ப்டனில் உள்ள இந்து சபா கோயில் மீது காலிஸ்தானி ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தினர். இந்த சம்பவத்தை ட்ரூடோ கண்டித்தார். ஒவ்வொரு கனடியரும் தங்கள் நம்பிக்கையை சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் கடைப்பிடிக்க உரிமை உண்டு என அவர் கூறினார்.

இந்த நிகழ்வை அடுத்து, கனடாவில் உள்ள இந்திய குடிமக்களின் பாதுகாப்பு குறித்து புதுடில்லி ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதாக வெளியுறவு அமைச்சகம் ஒரு அறிக்கையில் தெரிவித்திருந்தது.

உரிய பாதுகாப்பு வழங்க கனேடிய அரசு அமைப்புகள் முன்வராததால் இந்த மாதம் திட்டமிடப்பட்ட சில தூதரக நிகழ்வுகளை ரத்து செய்வதாக டொராண்டோவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்திருந்தது.